Trust.O.P.No.61/2023 தேதி - 20.12.2024

ம.சா.1–சந்தனம் செட்டியார்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறார்.

மனுதாரர் தரப்பு முதல் விசாரணை தொடர்ச்சி

பகவான் செட்டியார் மகன் சுப்பையா செட்டியார் வாரிசு சான்றிதழ் ம.சா.ஆ.11 ஆகும்.

1ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்குவிசாரணை –

எனக்கு எழுதப் படிக்கத் தெரியாது. நான் விவசாயம் செய்து வருகிறேன். எனக்கு வயது 76. 25 வருடமாக ம.சா.ஆ.1 ஆவணத்தை பற்றி தெரியும். ம.சா.ஆ.1 ஆவணத்தின் அசல் ஆவணம் எங்கே என்றால் அதை பற்றி தெரியாது. எந்த ஆவணத்தின் அடிப்படையில் நகல் எடுத்தேன் என்றால் என் தந்தை டிரஸ்ட் சொத்து சம்மந்தமாக அதை வேறு நபர்கள் ஆக்கிரமிப்பு செய்ததாகவும், அதன்மீது நடவடிக்கை எடுக்குமாறும் கடிதம் எழுதியதன் அடிப்படையில் ஒரு சிலிப் இருந்தது, அதன் படி எனக்கு தெரியும். மேற்படி சிலிப்பை தாக்கல் செய்வேனா என்றால் அது எங்கே இருக்கிறது என்று தெரியாது. டிரஸ்ட் எழுதும் போது யார் யாரெல்லாம் அறங்காவலர்கள் என்று தெரியுமா என்றால் அந்த காலகட்டத்தில் தெரியாது, தற்போது அறங்காவலர்கள் இருக்கிறோம். தற்போது நாங்கள் டிரஸ்ட் உருவாக்கியிருக்கிறோம். மேற்படி டிரஸ்ட் உருவாக்கி 10 வருடங்களுக்கு மேலாகிறது. இனிமேல் டிரஸ்டை பதிவு செய்யவேண்டும். தற்போதைய அறங்காவலர்களாக சந்தனம் செட்டியார், ஆவுடையப்பன், வேலு ஆகியோர் இருக்கிறோம். மேற்படி நாங்கள் மூவரும் தான் வழக்கு தாக்கல் செய்துள்ளோம். 2 ஏக்கர் 76 செண்ட் இடம் எங்களது முன்னோர்களால் தர்ம காரியத்திற்காக கிரையம் வாங்கப்பட்ட இடம். மேற்படி இடம் முழுவதும் தர்ம காரியத்திற்கு தான் செலவழிக்க வேண்டும். ம.சா.ஆ.1 ஆவணத்தில் 100 ரூபாய் கொடுத்து 2 ஏக்கர் 76 செண்ட் இடம் கிரையம் பெற்றதாக சொல்லப்பட்டுள்ளது. ம.சா.ஆ.1 ஆவண காலத்தில் சிவன் செட்டியார், சங்கரலிங்கம் செட்டியார், பகவான் செட்டியார், சுப்பன்

செட்டியார், சுப்பையா செட்டியார், ராமன் ஆகியோர்கள் அறங்காவலர்கள் ஆவார்கள். மேற்படி 6 நபர்களின் மூத்த ஆண் மகன்கள் தான் பரம்பரை அறங்காவலராக வரவேண்டும் என்று உள்ளது என்றால் சரிதான். ம.சா.ஆ.1 ஆவணத்தின் படி டிரஸ்டின் பெயர் தெரியாது. ம.சா.ஆ.1 ஆவணத்தின் படி சர்வே எண்.1223/1, 1223/4 மொத்த விஷ்தீரணம் 2 ஏக்கர் 76 செண்ட் என்றால் சரிதான். மேற்படி அறங்காவலர்கள் சேர்ந்து தபசில் சொத்திற்குரிய வருமானத்தை வெங்கடாசல தேவரிடம் ஒப்படைக்கவேண்டும் என்றால் சரிதான். மேற்படி வெங்கடாசலதேவர் டிரஸ்ட்கான செலவுகளை செய்துவிட்டு கணக்கு கொடுக்கவேண்டும் என்றால் சரிதான். செலவு போக மீதம் இருந்தால் வட்டிக்கு கொடுக்கவேண்டும் என்றால் சரிதான். வட்டிக்கு கொடுத்தது போக மீத்தொகையை அறங்காவலர்களும், அவர்களது மகன்களும் செலவு செய்யக்கூடாது என்றால் சரிதான். ம.சா.ஆ.1 ஆவணத்தின் படி அதில் உள்ள அறங்காவலர்கள் என்னென்ன தர்ம காரியங்கள் செய்யவேண்டும் என்பது எனக்கு தெரியாது. 6 அறங்காவலர்களின் மூத்த ஆண் வாரிசுகள் அறங்காவலராக இருக்க விருப்பம் இல்லாதபட்சத்தில் அவர்கள் சம்மதத்தின் பேரில் அவருடைய உடன்பிறந்தவர்களை அல்லது வேறு நபர்களை அறங்காவலராக நியமிக்கலாம் என்றால் சரிதான். அறங்காவலர் ஒருவர் இறந்துவிட்டால் மற்ற அறங்காவலர்கள் சேர்ந்து வேறு அறங்காவலரை நியமிக்கலாம் என்றால் சரிதான். சிவன்செட்டியாருக்கு எத்தனை குழந்தைகள் என்று எனக்கு தெரியாது. சங்கரலிங்க செட்டியார் எனது தாத்தா. 6 அறங்காவலர்களின் வாரிசுகள் பற்றிய விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. ம.சா.ஆ.1ல் கண்டுள்ள 6 அறங்காவலர்கள் காலமான பின்பு டிரஸ்ட் சொத்துக்களின் அனுபவம் 2,3 எதிர்மனுதாரர்களின் கைவசம் தான் இருந்து வருகிறது என்றால் சரிதான். டிரஸ்ட் சொத்தில் வடபுறம் 30 செண்டை பொறுத்து அப்போதைய அறங்காவலர் சீனிவாச தேவரிடமிருந்து 1ம் எதிர்மனுதாரர் தானமாக பெற்றுள்ளார்கள் என்றால் சீனிவாச தேவர் எழுதித்தரவில்லை, யார் எழுதிக்கொடுத்தார் என்று எனக்கு தெரியாது. 1ம்எதிர்மனுதாரர் கோவிலுக்கு

ம.சா.ஆ.1ஐ பொறுத்து தெரியப்படுத்தவில்லை. 30 செண்டில் 1ம் எதிர்மனுதாரர் கோவிலில் இருந்து பக்தர்கள் தங்குவதற்காக கட்டிடம் கட்டியுள்ளார்கள், பெண்களுக்கும், ஆண்களுக்கும் கழிப்பறை கட்டியுள்ளார்கள், குடிநீர் தொட்டி கட்டியுள்ளார்கள், வாகனம் நிறுத்தும் செட் போட்டுள்ளார்கள், தகவல் மையம் வைத்துள்ளார்கள் என்றால் சரிதான். 30 செண்டிக்கு தெற்கே மீதமுள்ள இடத்தில் 2,3 எதிர்மனுதாரர்களும், அவரது வகையறாக்களும் கார், இருசக்கர வாகனம் நிறுத்துவதற்கு செட் போட்டு அதை வாடகைக்கு விட்டு அதை பயன்படுத்தி வருகிறார்கள் என்றால் சரிதான். 2,3 எதிர்மனுதாரர்கள் அது தவிர மக்கள் தங்குவதற்காக கட்டிடம் கட்டி வாடகைக்கு விட்டு அனுபவித்து வருகிறார்கள். நாங்கள் 10 முறை கட்டிடம் கட்டுவதை எதிர்த்து ஆட்சேபணை செய்து மனு கொடுத்துள்ளோம், அதை மீறி அவர்கள் கட்டிடம் கட்டி வருகிறார்கள். அது சம்மந்தமான மனு ஆதாரங்கள் வைத்துள்ளோமா என்றால் மனுக்கள் தாக்கல் செய்யவில்லை, அது சார்பாக மாவட்ட நிர்வாகத்திற்கு அனுப்பியுள்ளோம். கட்டுமானங்கள் முன்னர் செய்தது என்றால் தற்போதும் கட்டி வருகிறார்கள். இதற்கு முன்னர் ஏன் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் மாவட்ட நிர்வாகத்திடம் சென்றோம், அவர்கள் தான் வழக்கு தாக்கல் செய்து பார்த்துக்கொள்ளுமாறு சொன்னதால் இந்த வழக்கை தாக்கல் செய்தோம். 25 வருடமாக டிரஸ்ட் சொத்தை கைப்பற்ற நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.</u>